நல்லூர் இணை நூலகம்.

# திருமலையில் புலிகள் தாக்குதல் : 4 இராணுவம் பலி

விலை ரூபா 5. 00

ஈழநாடு

EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 37 திருவள்ளுவர் ஆண்டு 2026 ஆனி 12 இதழ் 142

யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 26 - 6 - 1995

(திருகோணமலை)

திருகோணமலை புல்மோட்டையில் இராணுவக் காவலரன் ஒன்றின் மீது விடுதலைப் புலிகள் நேற்று முன் தினம் நடாத்திய தாக்குதலில் நான்கு இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். பலர் தப்பி ஓடிவிட்டனர்.

நேற்று முன்தினம் காலை 5. 45 க்கு புல்மோட்டை 8ம் கட்டையில் இந்தச் சம்பவம் இடம் பெற்றது.

புலிகளின் ஐந்து நிமிட அதிடித் தாக்குதலின்போது பல

[6ம் பக்கம் பார்க்க]

## பல்வேறு மோதல்களில் 6 புலிகள் வீரச்சாவு

(கொழும்பு)

கடந்த சில தினங்களாக வடக்கு கிழக்கில் இடம் பெற்ற பல்வேறு மோதல்களில் 6 விடுதலைப்புலிப்போராளிகள் வீரச்சாவடைந்துள்ளனர்.

திருமலை புல்மோட்டையில் நேற்று முன்தினம் படையினருடன் ஏற்பட்ட மோதலில் 2ம் லெப். செல்வக்குமார் அல்லது விநாயகம் ஜெகரன் (யாழ்ப்பாணம்) வீரச்சாவடைந்தார்.

கடற்பரப்பில் கடற்படையினருடன் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட மோதலில், 2ம் லெப். தியாகு அல்லது மாணிக்கம் முத்துலிங்கம் (அம்பாறை) வீரச்சாவடைந்தார்.

யாழ்.மாவட்டத்தில் நேற்று

(6-ம் பக்கம் பார்க்க)

★ விடுதலைப் புலிகளுக்கு எதிராக

# ராணுவத்துடன் சேர்ந்து போரிட தமிழ்க் குழுக்களுக்கு அழைப்பு!

## ஜனாதிபதி சந்திரிகா விடுத்தார்

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரில் அரசபடைகளுடன் இணைந்து போராட வருமாறு ஜனாதிபதி சந்திரிகா தமிழ் குழுக்களுக்கு அழைப்பு விடுத்துள்ளதுடன் இது தொடர்பாக அக்குழுக்களை சந்தித்து பேச்சுக்கள் நடாத்தியுள்ளதாகவும் ஏஜென்சி செய்திகள் தெரிவித்துள்ளன.

இந்தப் போரில் சிறிலங்கா இராணுவத்துக்கு உதவுமாறு அவர் தமிழ்க குழுக்களை கேட்டுள்ளார்.

புலிகளை எதிர்ப்பதற்கு வேண்டிய அனைத்து வசதிகளும் இந்தத் தமிழ்க் குழுக்களுக்கு செய்து தரப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பில் இயங்கும் தமிழ்க் குழுக்களான ஈ. பி. டி. பி, புளொட், ரெலோ ஈ. பி. ஆர். எல். எவ் போன்ற

(6ம் பக்கம் பார்க்க)

## பெருமளவு நவீன ஆயுதங்களை அரசு ஈ.பி.டி.பி.க்கு வழங்கியது

(கொழும்பு)

விடுதலைப்புலிகளை எதிர்த்து போரிட ஈ. பி.டி. பி. க்கு அரசு பெருமளவு ஆயுதங்களை வழங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

விடுதலைப்புலிகளுடன் போரிடுவதற்கு தமிழ் ராணுவ பிரிவு அமைக்கப்படவேண்டும் என்று ஈ. பி. டி. பி தலைவர் திரு. டக்ளஸ் தேவானந்தா பல தடவைகள் அரசை வலியுறுத்திவந்தார்.

தீவுப்பகுதிகளில் ராணுவத்

(6ம் பக்கம் பார்க்க)

★ தப்பியோடிய படையினர் விவகாரம்:

## அரசின் அழைப்பை ஏற்பதற்கு படையினர் குடும்பத்தவர் மறுப்பு

(கொழும்பு)

இராணுவத்திலிருந்து தப்பியோடியவர்களை மீண்டும் படைகளில் சேருமாறு அரசு விடுத்த அழைப்பை ஏற்க படையினரின் குடும்பத்தவர்களும் மறுப்பு தெரிவித்து வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

அரசின் மன்னிப்பு கடிதங்களை படையினரின் வீடுகளுக்கு நேரில் கொண்டுசென்ற கிராம சேவர்களிடமிருந்து அக் கடிதங்களை ஏற்க மறுத்த

(6ம் பக்கம் பார்க்க)

வடக்கு—கிழக்கிற்கான

## இடைக்கால சபை பற்றி ஆராய அரசு ஐ.தே.க.வை அழைக்கவில்லை

(கொழும்பு)

வடக்கு கிழக்குப் பிரதேசங்களுக்கு தற்காலிக இடைக்கால சபை ஒன்றைஏற்படுத்துவது சம்பந்தமாக அரசாங்கத்துக்கும் சில அரசியல் கட்சிகளுக்கும் இடையில் நடந்த பேச்சுவார்த்தையில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு அழைப்பு விடுக்க வில்லையென்று திகாமடுல்ல நாடாளுமன்ற உறுப்பினர் பி. தயாரத்ன அரசாங்கத்தை குற்றம் சாட்டியுள்ளார் என்று பி. பி. ஸி சிங்கள சேவை தெரிவித்தது.

பி. பி. ஸி சந்தேசியாவில் திரு. பி. தயாரத்ன மேலும்

[6-ம் பக்கம் பார்க்க]

## கண்டியின் பாதுகாப்பு பலப்படுத்தப்படுகிறது

(கண்டி)

கண்டியில் அடுத்த மாதம் நடைபெறவுள்ள 'எசலபெரகரா'வை முன்னிட்டு கண்டி மாநகரின் பாதுகாப்பு பெருமளவில் பலப்படுத்தப்பட்டு வருவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இப் பெரகராவுக்கு பல்லா

(6-ம் பக்கம் பார்க்க)

## கொழும்பிலிருந்து தமிழர் பெருமளவில் வெளியேற்றம்

(கொழும்பு)

கொழும்பிலிருந்து பெருமளவு தமிழர்கள் வெளியேறி வருவதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

கொழும்பிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் அண்மைக்காலமாக படையினர்

(6ம் பக்கம் பார்க்க)

ஜூலை 11ம் திகதி

## மலையகம் எங்கும் அடையாள வேலைநிறுத்தம்

(கொழும்பு)

தற்போதைய அரசாங்கத்திற்கு எதிராக பாரிய அளவில் தொழிற்சங்க போராட்டம் ஒன்றை நடாத்த மலையக தொழிற் சங்கங்கள் திட்டமிட்டு வருவதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

16 தொழிற்சங்கங்கள் கூட்டாக ஒருநாள் அடையாள வேலைநிறுத்த போராட்டத்தில் குதிக்க முடிவெடுத்துள்ளதாகவும் அறியப்படுகிறது.

(5 ம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திவேலைகள் ரத்து!

(மட்டக்களப்பு)

வடக்கு கிழக்கில் தொடரும் யுத்தத்தை காரணம் காட்டி மட்டக்களப்பில் மேற்கொள்ளப்படவிருந்த அபிவிருத்தி வேலைகளை அரசாங்கம் நிறுத்துவதிலும் ஒத்திப் போடுவதிலும் ஈடுபட்டு வருவதாக விடயமறிந்த வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

இதன் முன்னோடி நடவடிக்

(5 ம் பக்கம் பார்க்க)

## கிறிஸ்தவ மத குருமீது சூடு புலிகள் மறுப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு வாகரை பகுதியில் கிறிஸ்தவ மதகுருவான வண. பிதா யேசுதாசன் துப்பாக்கிப்பிரயோகத்திற்கு இலக்கான சம்பவத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் எதுவித சம்பந்தமும் இல்லையென விடுதலைப புலிகள் தெரிவித்துள்ளனர்.

இவ்விடயம் தொடர்பாக விடுதலைப் புலிகள் மேலும் தெரிவிக்கையில்: அரசாங்க

(6ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### விற்பனையாகிறது

நயினை நாகபூசணி அம்மனின் உற்சவத்தை முன்னிட்டு. நயினை நாகபூசணி படம் பிறேம் போட்டு விற்பனையாகிக் கொண்டிருக்கின்றது. விலை ரூபா 140/-. பூபாலசிங்கம் புத்தக நிலையம், யாழ்ப்பாணம். (எ 5039)

### சேவை

போட்டோ ஸ்ரட் - 5/- (காகிதாதிகள் தனி) பெருப்பித்தும் (205%) சிறுப்பித்தும் (48%) கொடுக்கப்படும். 100 ரேனியோ 19/- இரு பக்கம் 29/- ஸ்ரென்சில்-10/- ரைப்பிங் தமிழ் - 7/- ஆங்கிலம் - 8/50 யாழ் மருந்தகம், 470 (250) ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (எ 5036)

### புலமைப் பரிசில்

ஆண்டு - 5 புலமைப் பரிசில் தேர்வுக்கான வினைப் பத்திரம் 1, வினாப் பத்திரம் 2 க்குரிய ''பொது விவேகம், பொதறிவு'' வெளிவந்துவிட்டது. வெளியீடு: சுப்பிரமணிய புத்தகசாலை - யாழ்ப்பாணம், (ஏ-5027)

### ஆண்டு–5 புலமைப்பரிசில்

ஆண்டு 5 புலமைப் பரிசில் 95 பரீட்சைக்காக புதிய பாடத்திட்டப்படி பயிற்சி வினாத்தாள்கள் (விடைகளுடன்) ஒவ்வொரு மாதத்தின் 2ஆவது, 4ஆவது ஞாயிற்றுக்கிழமைகளில் வெளியிடப்படுகின்றன அடுத்த வெளியீடு 25-6-95 பயிற்சி வினாத்தாள்களையும் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம். BOND 58 A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (எ 5017)

### உலர்உணவு பொருட்கள்

(ஆனைப்பந்தி)

தீவக பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்களின் பாவனையாளர்களுக்குரிய ஏப்ரல் கடைசி இருவாரத்திற்கும்மேமுதல்இரு வாரத்திற்குமான நிவாரண உலர் உணவுப் பொருட்கள் தற்போது அந்தந்த சங்கங்களின் நிவாரணக் கிளைகளில் வழங்கப்பட்டு வருகின்றன.

செயலக புனர் வாழ்வுப் பகுதியின் விநியோகப் பட்டியலின்படி அரிசி, மா, சீனி, பருப்பு, பயறு அகிய பொருட்கள் இவ் விநியோகத்தின் போது வழங்கப் படுகின்றன. 101 59

### நிவாரண உணவு முத்திரை

(மானிப்பாய்)

நவாலி கிழக்கு, ஆனைக்கோட்டை, மானிப்பாய் தெற்கு கிராம சேவையாளர் பிரிவுகளில் தங்கியிருக்கும் இடம்பெயர்ந்தவர்களுக்கான 10வது தொடரிலக்க நிவாரண உணவு முத்திரைகள், அவ்வப் பகுதிக் கிராம சேவையாளர்களினால் தற்போது வழங்கப்பட்டு வருகின்றன. 71

### லங்கா சீமெந்து சம்பளம்

(யாழ்ப்பாணம்)

லங்கா சீமெந்து நிறுவனத்தின் சகல ஊழியர்களினதும் வைகாசி ஆனி மாதங்களுக்குரிய கொடுப்பனவுகள் யாழ். வர்த்தக வங்கியில் நாளை 27ம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிமுதல் நண்பகல் 12-00 மணி வரை நடைபெறும்.

# இடம்பெயர்ந்தவர்களின் வீடுகளில் திருட்டு

(யாழ்ப்பாணம்)

அச்சுவேலிப் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்த மக்களின் வீடுகளிலிருந்து தினமும் திருடர்கள் பெறுமதிமிக்க பொருட்களைத் திருடிச் செல்வதாக தமது வீடுகளைப் பார்க்கச் சென்று திரும்பியவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

மக்கள் இல்லாத அச்சுவேலி பத்தமேனிப் பகுதிகளிலுள்ள வீடுகளில் இரவு நேரங்களில் செல்லும் திருடர்கள் அங்குள்ள பெறுமதி வாய்ந்த நீர் இறைக்கும் இயந்திரம், வீட்டுத் தளபாடங்கள், சைக்கிள்கள் விவசாய உற்பத்திப் பொருட்களைத் திருடிச்செல்வதாகவும் இதனால் தமக்குப் பெரும் நட்டங்கள் ஏற்பட்டிருப்பதாகவும் அவர்கள் தெரிவித்திருந்தனர். 162-ரி

# ஐ. நாவின் ஆயிரமாவது தீர்மானம் நிறைவேறியது

(லண்டன்)

ஐக்கிய நாடுகள் சபை அதன் ஆயிரமாவது தீர்மானத்தை நேற்று முன்தினம் நிறைவேற்றியது.

1945-ம் ஆண்டு ஜூன மாதம் 26-ம் திகதி ஐ. நா. சாசனம் சான்பிரான்கிஸ்கொவில் கைச்சாத்திடப்பட்டு 50 வருடம் பூர்த்தியாகும் இவ்வேளையில் அது தனது ஆயிரமாவது தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

சைப்பிரஸில் 1175 ஐ. நா. படையினரை மீண்டும் சேவையிலீடுபடுத்துவதற்கு இந்த ஆயிரமாவது தீர்மானம் வழி செய்கிறது. -கி

### முதலாமிடம்

(ஆனைப்பந்தி)

அண்மையில் யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்ற மாவட்ட மட்ட தமிழ்க்கலைத் திறன் போட்டிகளில் காரைநகர் கலாநிதி தியாகராஜா மத்திய மகா வித்தியாலயம் பிரிவு 2ற்கான குறட்பா அறிவுப் போட்டியில் முதலாமிடத்தைப் பெற்றுள்ளது. 101

# அதிகமான இலங்கையருக்கு சவூதியில் வேலைவாய்ப்பு

(கொழும்பு)

சவூதிஅரேபியாவில் இலங்கையருக்கு வேலைவாய்ப்பு பெற்றுக்கொடுக்கும் முயற்சியில் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் ஈடுபட்டு வருகின்றது.

இதன் முன்னோடி நடவடிக்கையாக அரச உயர்மட்ட தூதுக்குழு ஒன்று விரைவில் சவூதி அரேபியா பயணமாகவுள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கையிலிருந்து வெளிநாட்டிற்கு வேலைவாய்ப்பு பெற்று செல்வோரில் 75 வீதம் மானோர் சவூதி அரேபியாவில் கடமை புரிவதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

### கட்டாக்காலி நாய்கள் அழிப்பு

(நெல்லியடி)

வடமராட்சிப் பகுதிகளில் வீதிகளில் கட்டாக்காலிகளாகத் திரிந்த சுமார் நூற்றுக்கு மேற்பட்ட நாய்கள் அண்மையில் அழிக்கப்பட்டன. 160

### ஜெனரேற்றர்திருத்தம்

(நெல்லியடி)

சுமார் ஒருவார காலம் செயலிழந்திருந்த மந்திகை மருத்துவமனை ஜெனறேற்றர், சுன்னாகம் மின்சார சபை பொறியியலாளர் குழுவினால் திருத்தப்பட்டுள்ளது. (160)

சாவகச்சேரி நகரசபை

## ஆதனவரி அறிவித்தல்

1995ம் ஆண்டு 2-ம் கந்தாயத்திற்குரிய ஆதனவரியை தண்டமின்றி 30-06-95ம் திகதி வெள்ளிக்கிழமை பகல் 12-30 மணி வரை செலுத்திக் கொள்ளலாமென்பதையும், குறிப்பிட்ட திகதிக்குப் பின்பு செலுத்தப்படும் வரியுடன், வசிப்பிட வளவுகளுக்கும் வெற்றுக் காணிகளுக்கும் 15 வீதமும், ஏனைய ஆதனங்களுக்கு 20 வீதமும் விருந்துக் கட்டணம் சேர்தது அறவிடப்படும் என்பதையும் வரியிறுப்பாளர்களுக்கு நினைவூட்ட விரும்புகிறேன்.

எனவே, 30-06-95ம் திகதிக்கு முன் வரிகளை நிலுவையின்றிச் செலுத்தி இச் சபையுடன் ஒத்துழைக்குமாறு சகலரையும் கேட்டுக் கொள்கின்றேன்

சி. நடராசா,
செயலாளர்.
நகரசபை, சாவகச்சேரி.

நகரசபை அலுவலகம்,
சாவகச்சேரி, 23-06-95.

(சி-5047)

## சந்தா விநியோகம்

''ஈழநாடு'' பத்திரிகை
யாழ். மாநகரசபை எல்லைக்குள் நாளாந்தம்
உங்கள் வீடுகளுக்கு
விநியோக கட்டணம் எதுவுமின்றி
விநியோகம் செய்ய
ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.
சந்தா பத்திரிகைகள்
தினமும் அதிகாலை 6–00 மணிக்கு முன்
எமது காரியாலய விநியோகப் பையன்களால்
உங்கள் வீடுகளுக்கு விநியோகம் செய்யப்படும்.

°° சந்தா கட்டணம்

| 1 வருடம் | 6 மாதம் | 3 மாதம் | 1 மாதம் |
|---|---|---|---|
| 1800/– | 900/– | 450/– | 150/– |

★ தங்கள் சந்தாவுக்கு நிறுவனத்துடன் காரியாலய நேரங்களில் தொடர்பு கொள்ளவும்.

விநியோக முகாமையாளர்,
**ஈழநாடு லிமிட்டெட்,**
**யாழ்ப்பாணம்.**

(ஏ-5045)

# கேள்வி அறிவித்தல்

## கல்வித் திணைக்களம்

## யாழ்ப்பாணம்

### யாழ். பிரதேச கல்வித் திணைக்களத்திற்குத் தேவையான தளபாடங்கள் வழங்கலும் விநியோகித்தலும்

01. யாழ். கல்வித் திணைக்களத்திற்கும் அதன் நிர்வாகத்தின் கீழ் இயங்கும் கோட்டகல்வி அலுவலகங்கள், பாடசாலைகள் ஆகியவற்றிற்கும் தேவையான கீழ்க்காணப்படும் தளபாடங்களை வழங்குவதற்கும், விநியோகிப்பதற்கும் முத்திரையிடப்பட்ட கேள்விகள் தளபாட விநியோகத்தர்களிடமிருந்து 1995 07-19ம் திகதி காலை 10 00 மணி வரை யாழ் கல்வித் திணைக்கள கேள்விச் சபைத் தலைவரினால் ஏற்றுக்கொள்ளப்படும்.

02. கேள்விகள் இத்திணைக்களத்திலிருந்து பெறப்பட்ட கேள்விப்படிவத்தில் இணைப்பிரதிகளில் தயாரிக்கப்பட்டு இத் திணைக்களத்தில வைக்கப்பட்டுள்ள கேள்விப் பத்திரப் பெட்டிக்குள் கேள்வி முடிவு நேரத்திற்கு முன்னர் சேர்க்கப்படல் வேண்டும். கேள்விப் பத்திரங்களை அனுப்பும் கடித உறையின் இடது மேல் மூலையில் 'அலுவலகத் தளபாடங்கள் வழங்குவதற்கும் விநியோகிப்பதற்குமான கேள்விகள்' எனக் குறிப்பிடப்படல் வேண்டும். கேள்வி முடிவு நேரத்திற்குப் பின்னர் கேள்விகள் திறக்கப்படும்; அச்சமயம் கேள்வியாளர்கள் அல்லது அவரது அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகள் சமூகமளிக்கலாம்.

03. கேள்விப் படிவங்கள். நிபந்தனைகள் மாதிரிப் படங்கள் ஆகியவற்றை மீளளிக்கப்படாத வைப்புப் பணமாக ரூபா 750/-ம், மீளளிக்கத்தக்க வைப்புப் பணமாக ரூபா 30,000/- ஆக மொத்தம் ரூபா 30750/-க்கு வங்கிக் கட்டளையைச் சமர்ப்பித்து உரிய பற்றுச்சீட்டினைப் பெற்று 1995-07-14ம் திகதி காலை 10.00 மணிக்கு முன்னர் எமது திணைக்களக் கணக்காளரிடம் பெற்றுக்கொள்ள முடியும்,

### தேவையான தளபாடங்கள்

1. அலுவலக மேசை [பெரியது]
2. அலுவலக மேசை [சிறியது]
3. கைப்பிடிக் கதிரை
4. உருக்கு அலுமாரி
5. மாநாட்டறை மேசை [பெரியது]
6. மாநாட்டறை மேசை [சிறியது]
7. உருக்கு கோவை தாங்கி
8. கடதாசி கனதி
9. அலுவலக மரத்தட்டு [றே]
10. சாதாரண கதிரை
11. சாதாரண மேசை
12. வாங்கு
13. அறிவித்தல் பலகை
14. கரும்பலகை தாங்கியுடன்
15. நூலகக் கதிரை
16. நூலக அலுமாரி [கண்ணாடி முகப்புப் பொருத்தப்பட்டது]
17. ஆய்வுகூட இருக்கை
18. மாணவர் உருக்கு மேசை
19. மாணவர் உருக்குக் கதிரை
20. பாலர் உருக்குக் கதிரை
21. பாலர் உருக்கு மேசை
22. ஸ்கிரீன் [பெரியது]
23. ஸ்கிரீன் [சிறியது]
24. நீள மேசை
25. நீள வாங்கு

வங்கிக் கட்டளையை கல்விப்பணிப்பாளர், யாழ்ப்பாணம் என்ற பெயருக்கு சமர்ப்பிக்க வேண்டும்.

கல்விப் பணிப்பாளர்
யாழ்ப்பாணம்

கல்வித் திணைக்களம்,
யாழ்ப்பாணம்.
1995-06-20

(எ 5033)

### மணிவாக்கு

மனிதனின் காலடிச் சுவடுகள் அவன்படைக்கும் முத்திரைகளே பாதைமாறும் போதும் பயணம் தவறும் போதும் மனிதனுக்கு இறைவன் அளித்த ஒரே சலுகை கண்ணீர் மட்டுமே.

- கண்ணதாசன்

## நமது நோக்கு

### ஏமாற்றும் அரசு

பிள்ளையார் பிடிக்கப்போய் அது குரங்காய் முடிந்த கதைபோல் சந்திரிகா அரசு அரசியல் தீர்வென்றும்நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறை மாற்றம் செய்யப்படும் என்றும் உரத்துக் கூவி இறுதியில் எல்லாவற்றிற்கும் பொதுவாக இடைக்கால நிர்வாக சபை அமைப்பொன்றைக் கொண்டு வரத் தீர்மானித்துள்ளது. உண்மையைக் கூறுவதென்றால் ஆட்சிக்கு வந்தபின்னர் மக்களின் அபிலாசைகளை தீர்க்க முடியாத நிலையில் உள்ள அரசு நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை மாற்றவிரும்பவில்லை. தனது ஆட்சியை தக்க வைப்பதற்கு அது தேவை என்பது சந்திரிகாவுக்குத் தெரியும். இதில் உள்ள விசேடம் என்னவென்றால் கொண்டுவர இருக்கும் இடைக்கால நிர்வாக சபைக்கு சட்ட பூர்வ அங்கீகாரம் வழங்க முடியாதாம். அதற்கு அரசியல் அமைப்புச் சட்டத்தில் விதிகள் இல்லையாம். ஆகவே இச்சபை சட்ட பூர்வமற்ற அங்கீகாரம் அற்றசபையாகவேஇயங்க முடியும், இதனால் தமிழ்க் குழுக்கள் குழம்பிப்போயியுள்ளனராம். கூட்டணிச் சிவசிதம்பரம் ஐயா இச்சபை ஒரு ஆலோசனைக் குழுவா அல்லது ஜனாதிபதியின் ஆட்சியை விரிவாக்குவதற்கான நிர்வாக அமைப்பா என்று தனக்கு விளங்கவில்லை என்று கூறுகிறார் 'சட்டபூர்வமற்ற'' ''அங்கீகாரமற்ற'' என்ற சொற்களின் அர்த்தம் மெத்தப்படித்த இவர்களுக்கு விளங்காமையின் காரணம் தான் எமக்கு விளங்கவில்லை. இதுவெளியுலகு நாடுகள் அரசை ஒரு தீர்வை முன்வைக்கும்படி கொடுக்கும் அழுத்தத்திற்காக அவர்களை ஏமாற்றுவதற்காக கொண்டு வரப்படுகிறது என்பதை இவர்கள் ஏன் விளங்கிக் கொள்ளவில்லை?

ஜே. வி.பியின் ஜனாதிபதி அபேட்சகர், சந்திரிக்கா நிறைவேற்று அதிகாரம்கொண்ட ஜனாதிபதி அமைப்பை மாற்றுவேன் பாராளுமன்றத்துக்கு பொறுப்பான பிரதம மந்திரி முறையைக் கொண்டு வருவேன் என்று உறுதி கூறியதன் பேரில் போட்டியிலிருந்து விலகிக் கொண்டார். அதனால் பல்லாயிரக்கணக்கான ஜே.வி.பி. இளைஞர்களின் வாக்குகளைப்பெற்று சந்திரிகா அமோக வெற்றியீட்டினார் ஆட்சிக்கு வந்த பின் உறுதிமொழி சிறிது சிறிதாகப் பின்போடப்பட்டு ஈற்றில் எதிர்வரும் யூலை 15க்குள் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறை மாற்றப்படும் என்று கூறப்பட்டது. ஆனால் அதற்கான நடவடிக்கைகள் ஒன்றும் எடுக்கப்படாத நிலையில் ஜே. வி. பி.யினர் கடிதம் மூலம் வாக்குறுதி நிறைவேற்றப்படா விட்டால் எதிர் நடவடிக்கை எடுக்கப்போவதாக அரசுக்கு அறிவித்துள்ளனர். நியாயமான கோரிக்கை: தமிழ் மக்களை ஏமாற்றப் பார்ப்பதுபோல் சந்திரிகா சிங்களவர்களையும் ஏமாற்ற எண்ணுகிறார். தனது தாயாரின் ஆட்சிக் காலத்திலும் பிரேமதாசாவின் ஆட்சியிலும் ஜே. வி. பி.யினர் எவ்விதம் நடந்து கொண்டனர் என்ற வரலாற்றை சந்திரிகா மறந்து போனாலும் சிங்கள இளைஞர்கள் சும்மாவா இருக்கப் போகிறார்கள்? அதற்கும் வெளிநாட்டு உதவி தேவைப்படுமோ?

# யுத்தமுனையிலுள்ள படையினரைத் திருப்திப்படுத்த பல திட்டங்கள் அமுல்

(கொழும்பு)

இராணுவத்தை திருப்திப்படுத்தும் பொருட்டு பல்வேறு திட்டங்களை அரசு நடைமுறைப்படுத்தி வருகிறது. அண்மையில் படையினருக்கான காப்புறுதி திட்டத்தை அறிமுகப்படுத்திய அரசு தற்போது வெண்தாமரைத் திட்டம் என்னும் பெயரில் புதிய திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்தியுள்ளது.

வடக்கு-கிழக்கு யுத்த முனைகளில் காயமடையும் படையினருக்கு உதவவென இத்திட்டம் அறிமுகப்படுத்தியுள்ளது.

யுத்தத்துக்காக பாதுகாப்பு வரியை அதிகரித்த அரசு தேசிய பாதுகாப்பு நிதியத்தின் மூலம் பெருந்தொகையான பணத்தை தென்னிலங்கையில் சேகரித்துவருகிறது

அமைச்சர்கள், அரச உயர் அதிகாரிகள், மற்றும் அரச ஊழியர்கள் பலர் தேசிய பாதுகாப்பு நிதியத்திற்கு உதவி வருகிறார்கள்.

ஜனாதிபதி சந்திரிகா தனது ஜூன் மாதச் சம்பளத்தை பாதுகாப்பு நிதியத்திற்கு வழங்கியது தெரிந்ததே.

பாதுகாப்புக்கான பெருமளவில் திரட்டப்படும் நிதி படையினரின் சேமநலங்களுக்கே கூடுதலாக பயன்படுத்தப்படவுள்ளது.

இதேவேளை காயமடையும் படையினருக்கு பல சலுகைகளை வழங்கிவரும் அரசு போர்முனைகளில் கொல்லப்படும் படையினரின் குடும்பங்களுக்கும் பல உதவிகளை வழங்கிவருகின்றது

வடக்கு கிழக்குப் பகுதிகளில் யுத்த முனைகளிலுள்ள படையினரை உற்சாகப்படுத்தவும், திருப்திப்படுத்தவுமே இவ்வாறு பல திட்டங்களை அரசு நடைமுறைப்படுத்தி வருகிறது. -ரி

### தையல் பயிற்சி

(வட்டுக்கோட்டை)

தேசிய சேவை இளைஞர் மன்றத்தினால் சித்தன்கேணி கலைநகர் மாதர் சங்க மண்டபத்தில் நடத்தப்பட்டு வரும் தையல் பயிற்சி வகுப்பில் 40 பேர் வரை பயிற்சி பெற்று வருகின்றனர்.

இப்பயிற்சி வகுப்பில்பயிற்சி பெறும் மாணவிகளது தையல், பூவேலைகளைக் கொண்ட கண்காட்சி ஒன்று விரைவில் நடாத்தப்படவுள்ளது. -139-கி

# கிழக்கில் படையினரால் காயமடையும் பொதுமக்கள் எண்ணிக்கை அதிகரிப்பு

(மட்டு நகர்)

மட்டக்களப்பில் படையினரின் நடவடிக்கைகளால் காயமடையும் படையினரின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக அங்கிருந்துவரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மட்டு வைத்தியசாலையிலும் நோயாளிகளைவிட காயமடையும் தமிழர்களே பெருமளவில் சிகிச்சை பெற்றுவருவதாக தெரியவருகிறது.

மிதிவெடிகள் அகற்ற கேடயமாக பயன்படுத்தப்படும் தமிழர்கள் மிதிவெடிகளில் சிக்கி தமது கால்களை இழந்து சிகிச்சை பெற்றுவருகிறார்கள். மற்றும் படையினரின் தேடுதல் நடவடிக்கையின்போது காயமடையும் பொதுமக்கள் ஷெல் தாக்குதல்களினால் காயமடையும் பொதுமக்கள் என தினமும் பலர் இப்பகுதியில் காயமடைந்துவருவது குறிப்பிடத்தக்கது.

படையினரின் நடவடிக்கையினால் காயமடையும் பொதுமக்களே மட்டு ஆஸ்பத்திரி வார்ட்டுகளில் அதிகம் காணப்படுகின்றனர் ரி

# இராணுவ நடவடிக்கைகளினால் பாடசாலைகள் இயங்கவில்லை

(யாழ்ப்பாணம்)

பத்தமேனி, அச்சுவேலிப் பகுதிகளிலுள்ள பாடசாலைகள் சென்ற சிலநாட்களாக மாணவர் வரவின்றி இயங்க முடியாது வெறிச்சோடிக் காணப்படுகிறது.

இப்பகுதிகளில் அண்மையில் நடைபெற்ற இராணுவ நடவடிக்கையைத் தொடர்ந்தே இப்பகுதியிலுள்ள பாடசாலைகள் அனைத்தும் இயங்கவில்லையெனத் தெரிவிக்கப்படுகிறது

பலாலிஇராணுவமுகாமைச் சேர்ந்த இராணுவத்தினர் பத்தமேனி அச்சுவேலிப்பகுதிகளை நோக்கி அண்மையில் மேற்கொண்ட நடவடிக்கையைத் தொடர்ந்து இப்பகுதிகளிலிருந்து அனைத்துமக்களும் இடம் பெயர்ந்து பாதுகாப்பான இடங்களுக்குச் சென்றுள்ளார்கள். இதனால் இப்பாடசாலைகளில் பயின்றுவந்த மாணவர்களின் வருகை இல்லாததால் இப்பாடசாலைகள் இயங்காத நிலையிலுள்ளது.

இப்பகுதிகளிலிருந்து வெளியேறி பாதுகாப்பான இடங்களில் தஞ்சமடைந்திருக்கும் மக்கள் இரவு நேரங்களில் தமது வீடுகளில் தங்குவதற்கு அஞ்சுவதால் பகலில் இப்பகுதிகளுக்கு வந்து தமது வீடுகளைப் பார்ப்பதுடன் தமக்கு வேண்டிய பொருட்களை எடுத்துக்கொண்டு செல்வதாகவும்தெரிவிக்கப்படுகிறது. இதனால் அச்சுவேலிப்பகுதியில் இயங்கி வந்த அரசினர்வைத்தியசாலையும் நோயாளர் நடமாட்டமின்றி வெறிச்சோடிக் கிடக்கிறது. 162-ரி

# இடம் பெயர்ந்தவர்களுக்கு பிறப்பு, இறப்பு, திருமணச் சான்றிதழ் வழங்குவதற்கு நடவடிக்கை

(கொழும்பு)

இடம் பெயர்ந்தவர்களுக்கு பிறப்பு, இறப்பு திருமணச் சான்றிதழ்கள் வழங்கும் திட்டம் கொழும்பு மாளிகாவத்தைச் செயலகத்தில் அமுல் செய்யப்பட்டு வருகின்றது.

இந்தச் சான்றிதழ்களைப்பதிவாளர் நாயகம் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ள முடியும்.

இதேவேளை ஆட்பதிவுத் திணைக்களம் வடக்குக் கிழக்கிலிருந்து இடம்பெயர்ந்து கொழும்பிலும், அயற்புறங்களிலும் தற்காலிகமாக தங்கியிருப்போருக்கு தேசிய அடையாள அட்டைகளை வழங்கவிருக்கின்றது.

இவ்வாறு தற்காலிகமாக தங்கியிருப்பவர்கள் கிராம அதிகாரிகள், பொலிஸ் அறிக்கை மற்றும் ஆவணங்களைச் சமர்ப்பிக்க வேண்டும் என்று தெரிவிக்கப்படுகிறது. -ரி

## கிளிநொச்சித் தபால்களும் படையினரால் சோதனை

[யாழ்ப்பாணம்]

கொழும்பில் இருந்து கிளிநொச்சி மாவட்டத்திற்கு எடுத்து வரப்படும் தபால்களை வவுனியாவில் வைத்து படையினர் கிழித்து பரிசோதனையை மேற்கொண்டு வருகின்றனர்.

இராணுவத்தினரின் பரிசோதனையை அடுத்தே தபால்கள் கிளிநொச்சிக்கு எடுத்து வரப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது

கொழும்பில் இருந்து ரயில் மூலம் எடுத்து வரப்படும் இத்தபால்களை இலங்கை செஞ்சிலுவை சங்கத்தின் கிளிநொச்சிபிரிவின் வாகனம்மூலம் கிளிநொச்சிக்கு எடுத்து வரப்படுகின்றன. 170-சி-ரி

## மாணவர் அறிவியற் கழக இவ்வார வகுப்புகள்

(யாழ்ப்பாணம்)

கோண்டாவிலில் இயங்கும் மாணவர் அறிவியல் கழகத்தில் இந்த வாரம் நிகழ்வுகள் பின்வருமாறு:-

26-ம் திகதி திங்கள் பி. ப. 3 மணிக்கு ஆண்டு-9க்கு கணித செயன்முறை வகுப்பு பி. ப. 3-30 மணிக்கு ஆண்டு-10 விஞ்ஞான செயன்முறை வகுப்பு பி. ப. 4 மணிக்கு ஆண்டு-11 கணித செயன்முறை வகுப்பு பி. ப. 5-30 மணிக்கு ஆங்கில வகுப்பு

27 ம் திகதி செவ்வாய் மு. ப. 9 மணிக்குஅளவெட்டி அருணாசலம் வித்தியாலயம் ஆண்டு 10, 11 க்கு செயன்முறை வகுப்பு பி. ப. 3-80 மணியிலிருந்து ஆண்டு-08 கணித செயன்முறை வகுப்பு.

28 ம் திகதி புதன் பி. ப. 3 மணிக்கு அறிவியல் ஒளிப்படக்காட்சி பி. ப. 4 மணிக்கு உறுப்பினர்களுக்கான கலந்துரையாடல் பி. ப. 5மணிக்கு விளக்க வகுப்பு.

29 ம் திகதி வியாழன் பி. ப. 3-30 மணிக்கு ஆண்டு-08 விஞ்ஞான செயன்முறை வகுப்பு. (சி)

## பாலர் பூங்கா திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

வல்வெட்டிதுறை கணபதி பாலர் பூங்கா திறப்புவிழா எதிர்வரும் 28 திகதி புதன் கிழமை மாலை 5. 00 மணிக்கு வல்வெட்டித்துறை நெடியகாடு கணபதி பாலர் பாடசாலையில் திரு. சூ. சேகுலநாயகம் தலைமையில் நடைபெறும்.

## பலதும் பத்தும்

### பீங்கான் கலை

களிமண்ணிலிந்து அழகிய பீங்கான் பொருட்களை உற்பத்தி செய்வதில் சீனர்களே உலகப் புகழ்பெற்றவர்கள். அதேவேளை... அந்தத் தொழில் நுட்பத்தின் இரகசியத்தைப் பேணுவதிலும் மிகக் கண்டிப்பாக இருந்தனர்.

250 ஆண்டுகளுக்குமுன்... ருஷ்யர் இந்த பீங்கான் கலையைத் தாமும் வளர்த்து அதன் உற்பத்தியில் ஈடுபடப் பல வகையிலும்முயற்சித்தனர்,

அதற்காக... சீனாவின்உதவி கிட்டாததால்... ஜேர்மனியப் பீங்கான் நிபுணரான கங்கீ(GUNGEE)என்பவரை அழைத்து... நிறைய வசதிகள் செய்து கொடுத்து... புதுவிதச் சூளைகள் அமைத்தும் அழகிய பீங்கான் உற்பத்தியாகவில்லை. பணம் பாழாகிய பின்...தனது நிபுணத்துவம் அவ்வளவுதான் என்பதை ஒத்துக்கொண்டு அவர் போய்விட்டாராம்!

ஆனால்... வினோகிறதோவ் என்ற ருஷ்யர் பலவித ஆய்வுகளை செய்து பீங்கான் உற்பத்திக்கு வித்திட்டாராம்!

— மயூரன்

# "எயிட்ஸ் நோயை எமது மண்ணில் பரவவிடாது தடுக்க வேண்டும்!"

(யாழ்ப்பாணம்)

உலக நாடுகளில் எயிட்ஸ் நோய் இன்று பயங்கர விளைவுகளை ஏற்படுத்தி வருகிறது. இப்பயங்கர நோயானது எமது நாட்டிலும் ஏற்படாதிருக்கக் கூடிய வகையில் முன்னெச்சரிக்கையாக இதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென்று யாழ். மாநகராட்சி மன்ற ஆணையாளர் திரு. வே. பொ. பாலசிங்கம் தெரிவித்தார்.

நாவலர் கலாசாரமண்டபத்தில் நடைபெற்ற எயிட்ஸ் நோய் பற்றிய பயிற்சி வகுப்பின் ஆரம்ப நிகழ்வுக்குத் தலைமை தாங்கி உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் சர்வதேச நாடுகளில் எயிட்ஸ் நோய் இன்று மிக வேகமாகப் பரவிவருகிறது. இந்நோயைப் பரவவிடாது தடுப்பதற்கான சரியான சிகிச்சை முறை இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை. இதனால் இந்நோய்த் தாக்கத்தினால் பயங்கரவிளைவுகள் ஏற்பட்டு வருகிறது.

எமது பிரதேசத்தில் இந்த வகையான பிரச்சனை இல்லாதிருந்த போதிலும் எதிர்காலத்தில் இப்படிப்பட்ட நோய்கள் அணுகாது இருப்பதுபற்றி ஆராயப்படுவதோடு இதற்கானதடுப்பு நடவடிக்கைகளையும் நாம் மேற்கொள்ளல் வேண்டும். இலங்கையில் அறுபதுவரையிலானவர்கள் இந்நோயினால் பீடிக்கப்பட்டிருப்பதாகஇனம் காணப்பட்ட போதிலும் யாழ்ப்பாணத்தைப்பொறுத்த மட்டில் இந்நோயினால் பீடிக்கப்பட்ட ஏழு பேர் இனங்காணப்பட்டுள்ளார்கள். இவர்களில் ஐந்து பேர் மரணத்தைத் தழுவிக் கொண்டார்கள்.

எயிட்ஸ் நோய் வெளிநாடுகளிலிருந்து இங்கு வந்திருப்பவர்களிடமே அதிகமாகக் காணப்படுகிறது. இந்நோய் எமது பிரதேசத்திலும் பரவவிடாது பாதுகாத்துக்கொள்ளக்கூடிய சகல நடவடிக்கைகளையும் நாம் மேற்கொள்ள வேண்டும். இந்நோய் வராது பாதுகாத்துக் கொள்வதுபற்றியும் மக்கள் மத்தியில் பிரசாரங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றார். 162-ரி

## தென்னாபிரிக்கா சாம்பியன்

(லண்டன்)

உலக றகர் வெற்றிக் கிண்ணத்தை தென்னாபிரிக்கா முதல் தடவையாக சுவீகரித்துக்கொண்டது.

தென்னாபிரிக்காவில் நடைபெற்ற உலக றகர் வெற்றிக் கிண்ணப் போட்டியின் இறுதியாட்டத்தில் தென்னாபிரிக்கா நியூஸிலாந்தை 15-12 புள்ளிகள் வித்தியாசத்தால் வெற்றி பெற்றது.

தென்னாபிரிக்க அதிபர் நெல்சன் மண்டேலா வெற்றி பெற்ற தென்னாபிரிக்க அணிக்கு வெற்றிக் கிண்ணத்தை வழங்கினார். (விரி)

## முதலுதவிப் பயிற்றுநர்க்கு பயிற்சியளிக்க ஏற்பாடு

(வேலணை)

இன்றைய போர்க்கால சூழ்நிலைக்கும் நடைமுறைத் தேவைக்கும் ஏற்பயாவருக்கும் முதலுதவி அறிவினைப்பெற்றிருத்தல் அவசிமானதொன்றாகும், இவ்வடிப்படையில தேவைக்கு ஏற்ப முதலுதவி அறிவினைப்பயிர்ற போதியளவு பயிற்றுநர்கள் தேவைப்படுகிறது.

அரசுசார்பற்ற நிறுவனங்களின் ஆதரவுடன் உடனடி முதலுதவி பயிற்றுநர் பயிற்சி அளிக்கக்கூடியதாக சகல பிரதேச செயலர் மட்டத்திலும் பயிற்றுநர்களை பயிற்றுவிக்க முடிவுகள் எடுக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்கபடுகின்றன. 75

## வண. பிதா ஜேசுதாசனுக்கு கொழும்பில் சிகிச்சை

(கொழும்பு)

மட்டு. வாகரையில் கடந்த வெள்ளிக்கிழமை துட்பாக்கியால் சுடப்பட்டு காயமடைத்து பொலனறுவை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கபபட்டிருந்த வண. பிதா யேசுதாசன் சத்திர சிகிச்சைக்காக கொழும்பு பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் இரவு அவர் பொலனறுவை ஆஸ்பத்திரியிலுருந்து கொழும்பு ஆஸ்பத்திரிக்கு கொண்டுவரப்பட்டார்.

வண. பிதா யேசுதாசன் விசேட வைத்திய நிபுணர்களால் கவனிக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது. -ரி

## பல் மருத்துவ சிகிச்சைக்கு யப்பான் ரூ.100கோடி உதவி

(கொழும்பு)

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பல் மருத்துவபீடத்தினை நவீனமயமாக்குவதற்கும் அங்கு புதிய பல் வைத்திய சிகிச்சை நிலையத்தை அமைப்பதற்கும் யப்பான் உதவி வழங்கவுள்ளது.

இவ்விரு திட்டங்களுக்கும் யப்பான் நூறு கோடி ரூபாவை உதவியாக வழங்கும்.

இதன் மூலம் வருடாந்தம் ஐம்பத்திஐயாயிரம் நோயாளர்களுக்கு சிகிச்சை வழங்க முடியும்.

கட்டிட வேலைகள் இவ்வருட இறுதியில் ஆரம்பமாகும். -கி

## போலியோ மருந்து கண்டறிந்தவர் மாரடைப்பால் மரணம்

(லண்டன்)

இளம்பிள்ளை வாதநோய்க்கான போலியோ தடுப்புமருந்தைக்கண்டு பிடித்த டாக்டர் ஜனைட்போல் மாரடைப்பால் நேற்றுக்காலமானார்.

இறக்கும் போது இவருக்கு வயதுஎண்பது. கலிபோர்னியா கிறீன் வைத்தியசாலையில் இவர் மரணத்தை தழுவிக் கொண்டர்.

போலியோ தடைமருந்தை இவர் 1954 ம் ஆண்டு கண்டு பிடித்திருந்தார். ''எயிட்ஸ்'' நோய்க்கான தடுப்பு மருந்தொன்றைக்காணும் முயற்சியிலும் டாக்டர் போல் தனது இறுதிக் காலத்திலீடுபட்டிருந்தார். -கி

## வருடாந்த உற்சவம்

[வேலணை]

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலயத்தின் வருடாந்த மகோற்சவம் எதிர்வரும் 28-ம் திகதி புதன் கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பதினாறு தினங்கள் நடைபெறவிருக்கின்றது.

தேர்த் திருவிழா அடுத்த மாதம் 11-ம் திகதி செவ்வாய்க்கிழமையும், தீர்த்த தோற்சவம் 12-ம் திகதி புதன்கிழமையும் நடக்கவிருக்கின்றது. -75-71

## அரச அதிபர் திரும்பினார்

(யாழ்ப்பாணம)

யாழ். அரசாங்க அதிபர் கே, பொன்னம்பலம் நேற்று முன் தினம் காலை கிளாலி யூடாக யாழ்ப்பாணம் திரும்பினார்.

கொழும்புசென்றிருந்தஅரச அதிபர் யாழ். மாவட்டத்தில் நிலவும் அத்தியாவசிய பிரச்சனைகளை கொழும்பில் அரச உயரதிகாரிகளுக்கு விரிவாக எடுத்து கூறினார் என்று செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. 170-சி-ரி

## கோழிகளுக்கு நோய்தடுப்பூசி

(கொழுமபுத்துறை)

வட்டுக்கோட்டை மிருக வைத்திய சாலையில் பிரதி சனிக்கிழமை தோறும் காலை 8. 30 மணி தொடக்கம் கோழிகளுக்கு நோய்த் தடுப்பு ஊசி ஏற்றப்பட்டு வருகின்றது. 154

## இராசி பலன்

26—06—1995

திங்கட்கிழமை

[தமிழுக்கு ஆனி—12]

சதுர்த்தசி பி. இ. 4-38 வரை: ரோகிணி மாலை 6-30 வரை, இராகுகாலம் காலை 7-25 முதல் 8 35 வரை, சுப வேளை பகல் 11-55 முதல் 1-25 வரை.

மேடம்: குடும்ப விவகாரம், மனத்தாங்கல், பணமுடை

இடபம்: உறவினர் நன்மை. தெய்வ வழிபாடு, பயணம்.

மிதுனம்: காரிய தாமதம், குறை கேட்டல், அலைச்சல்.

கடகம்: எதிர்பாராத நன்மை, கூடிப்பேசுதல், பண வரவு

சிங்கம்: தாய்வழி உறவு, வாக்கு வன்மை, நண்பர் வருகை

கன்னி; குடும்ப பிரிவு, அமைதிக் குறைவு, கடன் இடர்ப்பாடு

துலாம்: தொழில் பகைமை விரோதிகள் வெறுப்பு, சுப விரயம்

விருச்சிகம்: சகோதர உதவி, நற்பெயர், கல கலப்பு

தனுசு: கடமையுணர்வு, அதிகாரிகள் பாராட்டு, தெய்வ சிந்தனை

மகரம்: மனப் போராட்டம், வேண்டாத தொல்லை, வெறுப்பு

கும்பம்; ஆணவப் பேச்சு, ஏமாற்றம், உடல் அசதி

மீனம்: தொழில் சிறப்பு, தந்திரோபாயம், தன் நிலை மறத்தல்

— ஜோஸ்யர்

## 'அலுகோசுவை' தேடி அலைகிறார் ஆணையாளர்

(கொழும்பு)

சர்ச்சைக்குரிய மரண தண்டனை முறை மீண்டும் நடைமுறைக்கு வந்துள்ளதையடுத்து சிறைச்சாலைத் திணைக்களத்திற்கு தற்போது புதிய 'தலையிடி' ஒன்று ஏற்பட்டிருக்கிறது.

மரணதண்டனையை நிறைவேற்றும் 'அலுகோசு' ஒருவரைத் தெரிவு செய்ய வேண்டிய பொறுப்பு தன்னிடம் சுமத்தப்பட்டிருப்பதாக சிறைச்சாலை ஆணையாளர் தெரிவிக்கிறார்.

கடந்த நாற்பது வருடகால மாகவெலிக்கடைசிறைச்சாலையில் கைதிகளை தூக்கிலிடும் பணியை நிறைவேற்றி வந்தவர் லுவிஸ்சிங்கோ என்பவர்.

இறுதியாக 1976ம் ஆண்டு ஜூலை மாதம் 27ம் திகதி எம்பிலிப்பிட்டியாவைச் சேர்ந்த சந்ததாஸ என்பவருக்கு லுவிஸ்சிங்கோ வெலிக்கடையில் வைத்து மரணதண்டனையை நிறைவேற்றியிருந்தார்.

பெல்ஜியத்திலிருந்து தருவிக்கப்பட்ட ஒருவகை விசேட கயிறு ஒன்றே கடந்த 40 வருடகாலமாக வெலிக்கடை சிறையில் மரணதண்டனையை நிறைவேற்றப் பயன் படுத்தப்பட்டுவருகின்றது. கி

## வெளிநாட்டு உதவியுடன் மின் உற்பத்தி நிலையம்

(லண்டன்)

வெளிநாட்டு மின் உற்பத்தி நிறுவனங்களின் கூட்டு முயற்சியில் இலங்கையில் பாரிய எண்ணெய் சுத்திகரிப்பு டீசல் மின் உற்பத்திநிலையம்ஒன்றைநிறுவ இலங்கை அரசு திட்டமிட்டுள்ளது,

2000 மில்லியன் டொலர் முதலீட்டிலான இந்நிலையம் நிறுவப்படின் அதுவே இலங்கையில் ஆகக்கூடிய வெளிநாட்டு மூலதனங்கொண்ட திட்டமாக அமையுமெனவும் ஆயினும் இத்திட்டம் சூழலியலளார்களின் கடும் விமர்சனத்துக்குள்ளாகும் என பி. பி ஸி வானொலி தெரிவித்தது. -தீ

## தகரத்திலடைக்கப்பட்ட மீனின் தரத்தை அதிகரிக்க முடிவு

(கொழும்பு)

தகரத்தில் அடைக்கப்பட்டு விற்பனை செய்யப்படும் மீனின் தரத்தில் மாற்றம் செய்ய அரசு முடிவெடுத்துள்ளது.

தகரத்திலடைக்கப்பட்டு விற்பனை செய்யப்படும் மீனின் தரத்தை அதிகரிப்பதே இதன் நோக்கமாகும்.

இத்திட்டத்தின் படி தகரத்திலடைக்கப்பட்ட மீனில உள்ளதிரவத்தின் பங்கை 70 சதவீதத்திலிருந்து 60 சதவீதமாகக் குறைப்பதற்கு நடவடிக்கையெடுக்கபடும்,

இந்த திரவத்தின் நிறையை கழித்தே மீனின் நிறையை உற்பத்தியாளர் தகரத்தில் இனிமேல குறிப்பிடவேண்டும், -கி

## க. பொ. த. (சா/த) பரீட்சைக்கு ஜூலை 15வரை விண்ணப்பிக்கலாம்

(உடுவில்)

எதிர்வரும் டிசமபர் மாதத்தில் நடைபெற இருக்கும் க. பொ, த. (சா த) பரீட்சைக்கான விண்ணப்பங்களை பரீட்சைத் திணைக்களத்துக்கு அனுப்பி வைக்குமாறு பரீட்சை ஆணையாளர் அறிவித்துள்ளார்.

இப்பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் இறுதி நாள் ஜூலை 15 ம் திகதியாகும்.

பாடசாலைகள் மூலமாக தோற்றும் பரீட்சார்த்திகள் தங்கள் விண்ணப்பங்களை தத்தம் பாடசாலை அதிபர்கள் மூலமாக அனுப்பிவைக்க வேண்டுமெனவும் தனிப்பட்ட பரீட்சார்த்திகள் தமது விண்ணப்பங்களை ஜூலை 17 ம் திகதிக்கு முன்பதாக அனுப்பி வைக்கவேண்டுமெனவும் தனிப்பட்ட பரீட்சார்த்திகள் மட்டுப்படுத்தப்பட்ட பத்துப் பாடங்களுக்கும் ஐம்பது ரூபாவுக்கான பற்றுச் சீட்டையும் இணைத்தல் வேண்டுமெனவும் பரீட்சை ஆணையாளர் அறிவித்துள்ளார். 109 கி

## யூரியா உரத்தின் விலை 20 ரூபாவினால் குறைப்பு

(கொழும்பு)

யூரியா உரத்தினதும், யூரியாவைப் பயன்படுத்தி தயாரிக்கப்படும் ஏனைய உரங்களினதும் விலைகள் மேலும் குறைக்கப்படவுள்ளன.

இதன்படி 50 கிலோ கிராம் எடையுள்ள ஒருமூடை யூரியா இன்று திங்கட்கிழமையிலிருந்து நானூற்றி எண்பது ரூபாவாக விற்பனை செய்யப்படும். இதற்கு முன்னர் இவ் உரம் மூடை 500 ரூபாவாகவிற்பனை செய்யப்பட்டது.

யூரியாவைப் பயன்படுத்தித் தயாரிக்கப்படும் ஏனைய உரங்களும் யூரியா கலப்பின் விகிதத்துக்கேற்ப குறைந்த விலையில் விற்பனை பெய்யப்படும்.

உலகச் சந்தையிலிருந்து இலங்கை உரக் கம்பனி தற்போது குறைந்த விலையில் உரத்தைப் பெறுவதையடுத்தே இவ் விலைக்குறைப்புச் செய்யப்பட்டிருக்கின்றது. கி

## மடுமாதா திருவிழா

(அரியாலை)

மருதமடு புனித ஜெபமாலை நாயகியின் வருடாந்த திருவிழா கடந்த 21ந்திகதிவெள்ளிக்கிழமை கொடி ஏற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்றுவருகின்றது.

எதிர்வரும் ஜூலை 2ந் திகதி ஞாயிற்றுக்கிழமை மன்னார் ஆறர் கருாநிதி இராயப்பு யோசவ் ஆண்டகை தலைமையில் திருவிழா கூட்டுத்திருப்பலி அதனை தொடர்ந்து புனித ஜெபமாலை நாயகியின் தேர்ப்பவனி ஆகியவற்றுடன் திருவிழா நிறைவுபெறுகின்றது. -59

# பாடசாலை மாணவர்க்கு இலவச மூக்குக் கண்ணாடி

(யாழ்ப்பாணம்)

றெட்பானு சிறுவர் பாதுகாப்பு நிறுவனம் பாடசாலை மாணவர்களுக்கு மூக்குக் கண்ணாடி வழங்கிவருகிறது.

மூக்குக்கண்ணாடி பெற விரும்பும் மாணவர்கள் தாம் கல்வி கற்கும் பாடசாலை அதிபர்களிடமிருந்து பெறப்பட்ட சிபார்சுக் கடிதத்துடனும் கண் பரிசோதகரால் கண் பரிசோதனை செய்யப்பட்டதற்கான சான்றிதழுடனும் விண்ணப்பிப்பதன் மூலம் மூக்குக் கண்ணாடியை பெற்றுக் கொள்ளலாம்.

இதுவரை நானூறு மாணவர்களுக்கு இதுபோன்ற மூக்குக்கண்ணாடிகள் வழங்கப்பட்டுள்ளன. 162-கி

# முகாம் விடுதிகளை திருத்த றெட்பானு கிடுகு உதவி

(யாழ்ப்பாணம்)

கோப்பாய்பிரதேச செயலர் பிரிவிலுள்ள அகதி முகாம்களில் வாழ்ந்துவரும் மக்களுக்கு அவர்கள் இருக்கும் கொட்டில்களை வேய்தற்கான கிடுகுகளை றெட்பானு சிறுவர் பாதுகாப்பு நிறுவனம் வழங்கியுள்ளது.

மழைக்காலம் அண்மிப்பதை தொடர்ந்து கோப்பாய் பிரதேச செயலர் பிரிவிலுள்ள எட்டு முகாம்களில் இருக்கும் 255 குடிசைகளில் வசித்து வரும் மக்களுக்கே இக்குடிசைகள் வேய்வதற்கான கிடுகுகள் வழங்கப்பட்டிருக்கின்றன. 162-கி

## நோயாளர் நலன்புரிச்சங்க

# சேவைக்கு மக்களின் பங்களிப்பு அவசியம்

(நெல்லியடி)

''வலுக்குறைந்த மக்களுக்கு உதவிகளை வழங்கி மறுவாழ்வு கொடுக்கும் நோயாளர் நலன்புரிச் சங்கத்தின் அளப்பரிய சேவைக்கு பொதுமக்களின் பங்களிப்பு மிக அவசியமாகும்''

இவ்வாறு பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலை நோயாளர் நலன்புரிச் சங்க ஆதரவில் ஊனமுற்ற மூவருக்குமுச்சக்கரவண்டி அன்பளிப்பு வழங்கும் வைபவத்தில் பேசியபருத்தித்துறைமாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் எஸ். கதிரவேற்பிள்ளை தெரிவித்தார்.

யாழ். போதனா வைத்தியசாலை நோயாளர் நலன்புரிச் சங்கத் தலைவர் டாக்டர் எஸ். சிவபாலன் தலைமையில் நடைபெற்ற இவ் வைபவத்தில் அவர் தொடர்ந்து பேசுகையில்:

வட-கிழக்கில் உதவிகள் இன்றி ஊனமுற்றிருப்பவர்களின் எதிர்கால நலன்கருதி சேவைபுரியும் நோயாளர் நலன்புரிச்சங்கத்தின் சேவை இன்றைய கால கட்டத்தில் மிகவும் முக்கியமானதாகும் என்றார்.

தொண்டமானாறு செல்வச் சந்நிதியைச் சேர்ந்த தம்பிராசா குணரத்தினம், கரவெட்டி இராஜ கிராமத்தைச் சேர்ந்தவர்களான குண்டுமணி உதயராணி, கோகிலவிஜி ஆகிய மூவருக்குமே முச்சக்கரவண்டிகள் அன்பளிப்புச் செய்யப்பட்டன. 160

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

1995 – 06 - 26

திங்கள் இரவு

8-02 தளிர்கள் சிறுவர்களுக்கான நிகழ்ச்சி
8-20 சமகாலப் பார்வை
8-30 செய்திகள்
8-40 தரிசனம்

1995–06–27

செவ்வாய் காலை

7-02 மாவீரவணக்கம்
7-15 இன்றைய தாரகை
7-30 செய்திகள்
7-35 பத்திரிகைச் செய்திகள்
8-00 தாயகப் பாடல்கள்

## தமிழீழ வானொலி நிகழ்ச்சி நிரல்

1995–06–26

திங்கள் மாலை

5-01 சிந்தனைச் சிதறல்
5-02 எழுச்சிகீதம்
5-10 புதியவை
5-15 ஆழியமுதம்
5-30 மாணவர் பக்கம்
6-00 சிந்தனைக்குச் சிலவினாடிகள்
6-02 நேயர் நெஞ்சம்
6-15 விளையாட்டுச் செய்திகள் விளையாட்டுச் செய்திகளைத் தொடர்ந்து என் தெரிவு.

# பேராசிரியர் பற்றிய தொகுப்பு

(பண்டத்தரிப்பு)

யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் அ துரைராசாவின் ஓராண்டு நினைவு தினத்தை முன்னிட்டு அன்னாரது வாழ்க்கை வரலாறு, கல்விச்சேவை மற்றும் சமூகசேவை பற்றி பத்திரிகைகள், சஞ்சிகைகள் ஆகியவற்றில் வெளிவந்த விபரங்கள் அடங்கிய தொகுப்பை சங்கானை பொதுசன நூலகத்தின் உதவி நூலகர் திரு. மா. கணேஸ் தொகுத்துவெளியிட்டுள்ளாக. 72 ர

# மண்ணெண்ணை விநியோகம்

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் 24வது சுற்றுக்குரிய மண்ணெண்ணை விநியோகம் இம்மாதம் 30ம் திகதியுடன் முடிவடைவதால் பாவனையாளர்கள் தங்களுக்குரிய மண்ணெண்ணையை குறிப்பிட்ட காலத்துக்குமுன் பெற்றுக்கொள்ளுமாறும் 26 பி, 27 ஏக்குரிய இலவச உலர் உணவுக்குரிய பொருட்களை இம்மாதம் 28ம் திகதிக்கு முன் பெற்றுக்கொள்ளுமாறும் ஊர்காவற்றுறை பலநோக்குக் கூட்டுறவுச்சங்கப் பொதுமுகாமையாளர் பாவனையாளர்களைக் கேட்டுக் கொள்கின்றார். (ம)

# திருவிழா

(அரியாலை)

நவாலி புனித இராயப்பர் சின்னப்பர் ஆலய வருடாந்த திருவிழா எதிர்வரும் 29ந் திகதி வியாழக்கிழமை நடைபெறவுள்ளது- -59

# இன்று

(அரியாலை)

யாழ். வண்ணை ஸ்ரீ வெங்கடேச வரதராஜபபெருமாள் ஆலய மகா சங்காபிஷேகமும் உற்சவமும் இன்று ஆரம்பமாகின்றது. 59

0 0

(மனிப்பாய்)

ஆனைக்கோட்டை அருள்மிகு ஸ்ரீ மூத்த நயினார் ஆலய ரதோற்சவம் இன்று காலை 8 மணிக்கு இடம்பெறவுள்ளது. 71

0 0

(மானிப்பாய்)

வடக்கு கிழக்கு அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனத்தின் கீழ் இயங்கும் ஆனைக்கோட்டை ஆறுகால மடம் அறிவொளி பாலர் பாடசாலையின் வருடாந்த விளையாட்டுப் போட்டி இன்று பிற்பகல் 1 மணிக்கு தில்லைவயல் அறிவொளி மைதானத்தில் சி க. தம்பிராசா தலைமையில் நடைபெறும். 71

0 0

(பண்டத்தரிப்பு)

சண்டிலிப்பாய் வேவிற்பதி ஸ்ரீ ஹரிஹர புத்திர ஐயனார் ஆலய வருடாந்த உற்சவம் கடந்த 18ம் திகதி ஞாயிற்றுக்கிழமையன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

இரதோற்சவம் இன்று 26ம் திகதியும், தீர்த்த உற்சவம் நாளை 27ம் திகதியும் நடைபெறவுள்ளன. (72)

0 0 0

(யாழ்ப்பாணம்)

யாழ். பூம்புகார் நித்திலா தமிழ்க்கலவன் பாடசாலையின் நித்திலா நினைவு தினமும் தமிழ்த்தின விழாவும் இன்று 26ம் திகதி திங்கட்கிழமை காலை 9-00 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் அதிபர் க. சண்முகலிங்கம் தலைமையில் நடைபெறும்.

0 0 0

(உடுவில்)

இணுவில் கந்தசுவாமி கோவில் வருடாந்த உற்சவம் கடந்த 3-ந் திகதி முதல் நடைபெற்று வருகின்றது.

இன்று 26-ந் திகதி திங்கட்கிழமை காலை 10 மணிக்கு தேர் உற்சவமும் நாளை மாலை 4 மணிக்கு தீர்த்த உற்சவமும், நடைபெறும். -109

0 0 0

(வட்டுக்கோட்டை)

சங்கானை பொதுநூலக உதவியாளர் திரு. மாணிக்கம் கணேஸ் யாழ் உள்ளூராட்சித் திணைக்களம்1994ல் நடாத்திய தமிழ் இன்பக்கண்காட்சியில் சிறப்புப்பரிசு பெற்றமையைக் கௌரவிக்கும் முகமாக இன்று 26ம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 3-30 மணியளவில் சங்கானை பொது நூலக மண்டபத்தில் சங்கானை வாசகர் வட்டத்தலைவர் சைவப்புலவர் நா. க. தங்கரத்தினம் தலைமையில் பாராட்டுவிழா நடைபெறவுள்ளது. -139

# விவசாயப் பயிற்சி வகுப்பு

(யாழ்ப்பாணம்)

விவசாயிகளின் விவசாயச் செய்கையை விரிவுபடுத்தும் நோக்கில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனமும் விவசாயத் திணைக்களமும் இணைந்து கிராமிய உற்பத்திக் குழு உறுப்பினர்களுக்கு, விவசாயிகளுக்கும் விவசாயப் பயிற்சி வகுப்பினை ஒழுங்கு செய்துள்ளனர்.

இன்று26ம்திகதி இமையாணன் சனசமூக நிலையத்தில் மு ப. 10 மணிக்கு நாளை 27ம்திகதி பளை மாதர் கிராம முன்னேற்றச் சங்கத்தில் மு ப 10 மணிக்கு அதே தினம் ஏழாலை றோ, க. பாடசாலையில் பி. ப. 03. 00 மணிக்கும், 29ம் திகதிகைதடி நாவற்குழி கிராமமுன்னேற்ற சங்கத்தில் மு. ப. 10. 00 மணிக்கும் தொல்புரம் மத்தி லக்கி கல்வி நிலையத்தில் மு ப 10 மணிக்கும் ஒழுங்குசெய்யப்பட்டுள்ளது.

# 'ராணி' வார இதழுக்கு இலங்கையில் தடை

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் தலைவர் திரு. பிரபாகரன் பற்றி கட்டுரை ஒன்று வெளியிட்டமைக்காக தமிழகத்திலிருந்து வெளியாகும் 'ராணி' வார சஞ்சிகையின் ஜூன் மாதம் 18 ம் திகதி இதழ் இலங்கையில் விற்பனை செய்யப்படுவதற்கு இலங்கை அரசு முற்றாக தடை செய்துள்ளது.

இது குறித்து சுங்கப் பகுதியினர் 'ராணி' குடும்ப சஞ்சிகையின் இலங்கை விநியோகத்தர்களுக்கு அறிவித்துள்ளனர்.

இலங்கையில் விற்பனை செய்வதற்கென இறக்குமதி செய்யப்பட்ட பெருந்தொகையான ஜூன் 18 ம் திகதிய 'ராணி' சஞ்சிகைகள் தற்பொழுது கொழும்பில் சுங்கப் பகுதியினரால் தடுத்து வைக்கப்பட்டுள்ளன. கடந்த 12 ம் திகதி கொழும்பை வந்தடைந்த இவ்விதழை முற்றாகத் தடை செய்வதற்கு தகவல் ஒலிபரப்பு அமைச்சு தீர்மானித்துள்ளது. (கிசிரி)

# அனர்த்தங்கள் தொடர்பான பயிற்சி கருத்தரங்கு

(கொழும்புத்துறை)

போர்க்காலச் சூழலில் ஏற்படும் அனர்த்தங்களுக்கு முகம் கொடுப்பதற்கானபயிற்சிக் கருத்தரங்குகள் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ் கிளையினரால் குடாநாட்டின் பல பகுதிகளிலும் நடத்தப்பட்டு வருகின்றன,

இக்கருத்தரங்குகள் கிழமை நாட்களில் பிற்பகலிலும், வார இறுதி நாட்களில் முழுநாளும் இடம்பெற்று வருகின்றன.

தமது பகுதிகளில் இது தொடர்பான கருத்தரங்குகளை நடத்த விரும்பும் கிராம முன்னேற்ற பொது அமைப்புகள் தம்முடன் கடித மூலமோ அல்லது நேரிலோ தொடர்பு கொள்ளுமாறு சங்க யாழ். கிளைச் செயலாளர் தெரிவித்துள்ளார். (154)

## தமிழீழ

# பொதுக்கல்வி தேர்வின் செயன்முறை தேர்வுகள்

(உடுவில்)

யாழ்ப்பாணம் கல்விமேம்பாட்டு பேரவையினால் நடத்தப்படும் தமிழீழ பொதுக் கல்வித் தேர்வின் செயன்முறைத் தேர்வுகள் இவ்வருடம் ஜூலை 1ம் திகதியில் இருந்து 17ம் திகதி வரை நடைபெறுமென தேர்வு ஆணையாளர் திரு. அ. சண்முகதாஸ் அறிவித்துள்ளார்.

பாடசாலை அதிபர்களுக்கு செயன்முறை தேர்வுகள் பற்றி அவர் அறிவித்துள்ள கடிதத்தில் தொழிநுட்பக் கல்விப் பாடங்களுக்கான தேர்வுகள் ஜூலை 1ம் திகதி தொடக்கம் 3ம் திகதிவரை நடைபெறும் எனவும், அழகியல்பாட தேர்வு ஜூலை 6ம் திகதி தொடக்கம் 14ம் திகதிவரை நடைபெறும் எனவும், விஞ்ஞானபடதேர்வு ஜூலை 15ம் திகதி தொடக்கம் 17ம் திகதி வரை நடைபெறும் எனவும் தெரிவித்துள்ளார். 109

# சிசுவின் சடலம் மீட்பு

(யாழ்ப்பாணம்)

கொழும்புத்துறை துண்டி மயானத்தில் இனந்தெரியாதோரால் புதைக்கப்பட்டிருந்த சிசு ஒன்றின் சடலத்தை காவல்துறையினர் மீட்டு விசாரணைக்காக எடுத்துச் சென்றுள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமை இந்த சிசுவின் சடலம் புதைக்கப்பட்டதாகவும் சடலத்தில் சிறுகாயங்கள் இருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. 170-சி-ரி

# கௌரவிப்பு

(உடுவில்)

கடந்த ஏப்ரல் மாதம் 5ம் திகதி கல்வளை பிள்ளையார் ஆலயத்தில் நடைபெற்ற கும்பாபிஷேகத்தை தொடர்ந்து அங்கு நிறுவப்பட்டுள்ள கல்வளை சின்னத்தம்பி புலவர் சிலைக்கும் மலர் மாலைகள் அணிந்து கௌரவிக்கப்பட்டது.

கும்பாபிஷேக விழாவில் நல்லை குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசாரிய சுவாமிகள், பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி. பேராசிரியர் கலாநிதி ப. கோபாலகிருஷ்ணன் ஆகியோர் கலந்துகொண்டு ஆசியுரை வழங்கினர். 109

## மட்டக்களப்பு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கையாக வாகரையில் மேற்கொள்ளவிருந்த 86 இலட்சம் ரூபா செலவிலான அபிவிருத்தி பணியை நிறுத்த அரசு முடிவெடுத்துள்ளது.

அரசின் பெரும் பிரச்சாரத்துடன் மேற்கொள்ளப்படவிருந்த சுவர்ண பூமி திட்டத்தையும் அரசு கைவிடப் பட்டுள்ளது.

மீன்பிடி தொடர்பான அபிவிருத்தி முயற்சிகள் எதுவும் தற்போதைக்கு மேற்கொள்ளப்படமாட்டாது என நீரியல் கடற்றொழில் அமைச்சு அறிவித்துள்ளதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

கதிரவெளி, பனிச்சங்கேணி, மாங்கேணி போன்ற பகுதிகளில் மேற்கொள்ளப்படவிருந்த வைத்தியசாலை மற்றும் பாடசாலை புனரமைப்பு வேலைகள் பலவும் கைவிடப்பட்டுள்ளன.

தேசிய அபிவிருத்தி அதிகார சபையின் பணிகளும் மட்டக்களப்பு மாவட்டத்தில் நிறுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. க-சி

## ஜூலை

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

ஜூலை மாதம் 11 ம் திகதி நடைபெறவுள்ள இவ் அடையாள வேலைநிறுத்தப்போராட்டமானது பெரும் தோட்டங்களை முற்று முழுதாக தனியார் மயமாக்கல் மற்றும் 50 வருடங்களுக்கு நிலத்தை குத்தகைக்கு வழங்குவதையும் கூலி உயர்வு மற்றும் காணிகள் உடைமையாக்கல் போன்ற கோரிக்கைகளை முன்வைத்து நடாத்தப்படவுள்ளது.

மலையக மக்கள் முன்னணியின் ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ், இலங்கை தேசிய தோட்ட தொழிலாளர் சங்கம் என்பன கூட்டாக நேற்று முன்தினம் கூடி இந்த முடிவை மேற்கொண்டன.

இக்கூட்டத்தில் அமைச்சர் தொண்டமான் தலைமையிலான இலங்கை தொழிலாளர்காங்கிரஸ் கலந்துகொள்ளவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. க-சி

## யுத்தம் நடக்கும் இவ்வேளையில்
# ஜனுதிபதி முறையை நீக்குவது பற்றி பேசுவது நியாயம்தானு? - அஷ்ரப் கேள்வி

(கொழும்பு)

நாடு யுத்தத்தில் ஈடுபட்டிருக்கும் இந்த நேரம் ஜனுதிபதி ஆட்சி முறையை நீக்குவது பற்றிப் பேசுவது நியாயம் தானு? என்று கடல் போக்கு வரத்து புனர்வாழ்வு அமைச்சர் எம். எச். எம். அஸ்ரப் கேள்வி எழுப்பியுள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற வை. எம். எம். ஏ. யின் 45 வது வருடாந்த மகாநாட்டிலேயே அவர் மேற்கண்டவாறு கேள்வி எழுப்பினர்.

அங்கு அவர் மேலும் கூறியதாவது: சிறுபான்மை மக்களின் பிரதிநிதித்துவத்தை பாதுகாப்பதுடன் ஒரு பலம் வாய்ந்த நாடாளுமன்றத்தை உறுதி செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். நாட்டில் நிலவும் பிரச்னைக்குத் தீர்வு காணவும் மொழிக் கொள்கை உதவும் என்றார்.

ஜனுதிபதி ஆட்சிமுறை பற்றி தற்போது பொ ச மு. அரசில் அங்கம் வகிக்கும் பல கட்சிகளிடையே பெரும் கருத்து மோதல்கள் எழுந்துள்ளதும் இதனுல் அரசு பல சிக்கல்களை எதிர் நோக்கியுள்ளதும் தெரிந்ததே. ம-சி

## அடுத்த ஒரு மாதத்தில் தமிழகத்தில் புதிய ஆட்சி
— சுவாமி கூறுகிறூர்

(சென்னை)

தமிழகத்தில் அ. தி. மு. க. வை சேர்ந்த 88 எம். எல். ஏக்களின் உதவியுடன் அடுத்த ஒரு மாதத்தில் புதிய ஆட்சி ஏற்படுமென ஜனதாகட்சித் தலைவர் சுப்பிரமணியசுவாமி தெரிவித்துள்ளார்.

மேற்படி 88 எம். எல். ஏக்களும் தனக்கு ஆதரவு வழங்கத் தயாராயிருப்பதாகவும் இதன் மூலம் புதிய ஆட்சி ஒன்றை தமிழகத்தில் அமைக்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

எனினும் சுப்பிரமணிய சுவாமியின் அறிவிப்பு எவ்வளவு தூரம் சாத்தியப்படும் என்பது தெரியவில்லையென தமிழக எதிர்க்கட்சிகள் தெரிவித்துள்ளன. -சி

# முஸ்லிம்களை ஆயுதபாணிகளாக்கி கிழக்கில் தமிழரைத் தாக்க முயற்சி!

(கொழும்பு)

கிழக்கில் முஸ்லிம் ஊர்காவல் படைகளை அமைத்து அவர்களுக்கு ஆயுதங்களை வழங்குவதன் மூலம் தமிழ் மக்களைத் தாக்க அரசு முயற்சி செய்து வருவதாக கிழக்கு வாழ் தமிழ்மக்கள் குற்றம் சாட்டியுள்ளதாக ஏஜென்ஸி செய்தி ஒன்று தெரிவித்தது.

காத்தான் குடியிலிருந்து முஸ்லிம்களை வெளியேறுமாறு புலிகள் கூறியதாக பொய்ப் பிரசாரங்களை கட்டவிழ்த்து விட்ட அரசு முஸ்லிம்களின் பாதுகாப்பிற்கென கூறி 5000 முஸ்லிம்களை உடனடியாக ஊர்காவல்படையில் சேர்க்க ஆரம்பித்துள்ளது

அமைச்சர் அஸ்ரப்பின் கோரிக்கைக்கு அமையவே இந்த ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுகிறது. இதன் மூலம் முஸ்லிம்களை ஆயுதபாணிகளாக்கி தமிழ் மக்களுக்கு எதிராக தாக்குதல் நடாத்தவும் அதன் மூலம் தமிழ்- முஸ்லிம் கலவரத்தை ஏற்படுத்தவும் அரசு சதி செய்வதாகவும் கிழக்கு வாழ் தமிழ் மக்கள் பலரும் கூறியுள்ளனராம். சி

## தமிழகத்தில் நாளை சட்டமறுப்பு போராட்டம்

(சென்னை)

தி. மு. கவை சேர்ந்த வழக்கறிஞர் சண்முகசுந்தரம் தாக்கப்பட்ட சம்பவத்தை கண்டித்து தமிழ்நாடு வழக்கறிஞர் சங்கம சட்டமறுப்பு இயக்கம் ஒன்றை நாளை தமிழகம் முழுவதும் நடாத்துவதற்கு ஏற்பாடு செய்துள்ளது.

இப்போராட்டத்திற்கு ஆதரவு அளிக்கப் போவதாக தமிழக இந்திரா காங்கிரஸ் கட்சித்தலைவர் குமரி அனந்தன் மற்றும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலர் ஆர். நல்லக்கண்ணுவும் முன் வந்துள்ளனர்.

இதேவேளையில் இப்போராட்டம் தற்போதைய தமிழக சூழ்நிலையில் அவசியம் தானு என்பது குறித்து மேற்படி சங்கம் மறுபரிசிலனை செய்ய வேண்டும் என மாக்சிஸ்ட் கம்யூனிஸ்ட்கட்சி செயலர் கேட்டுள்ளார்.

மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக்கழகம் இப்போராட்டத்தை ஆதரிக்கவில்லையென அக்கட்சியின் பொதுச்செயலர் வை கோபாலசாமி தெரிவித்துள்ளார். க-சி

## சர்வதேச தொடர்புடைய
# போதைவஸ்து கடத்தல் கோஷ்டி
## சென்னையில் கைது; நால்வர் இல. தமிழர்

(சென்னை)

சர்வதேச போதைப் பொருள் கடத்தல் கும்பல் ஒன்று சென்னையில் நேற்று கைது செய்யப்பட்டதாக சென்னை போதைப் பொருள் கட்டுப்பாட்டு மண்டல இயக்குநர் பி. வி. கே. ரெட்டி தெரிவித்துள்ளார்.

அவர் இது தொடர்பாக மேலும் தெரிவிக்கையில்; இலங்கையைச் சேர்ந்த நால்வர் உட்பட 6 பேர் இச் சம்பவத்தில் கைது செய்யப்பட்டனர்.

இக்கும்பலிடமிருந்து 2 கோடி டொலர் மதிப்புள்ள 20 லட்சம் 'மான்ராட்' எனப்படும் போதை மாத்திரைகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இக்கும்பலில் இலண்டனில் உள்ள இந்தியர் ஒருவரும் சம்பந்தப்பட்டுளளார். இக் கும்பல் டுபாய், தென் ஆபிரிக்கா, இந்தியா போன்ற நாடுகளில் செயற்பட்டுவருகிறது.

கடந்த பல வருடங்களில் தமிழகத்தில் முறியடிக்கப்பட்டமிகப் பெரும் போதைப் பொருள் கடத்தல் இது எனவும் தெரிவித்தார் க-சி

## வெற்றிலைக்கேணி மோதல்:
# சிப்பாய் படுகாயம்

(கொழும்பு)

வெற்றிலைக் கேணிப்பகுதியில் நிலைகொண்டிருக்கும் இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் ஏற்பட்ட மோதலில் இராணுவ சிப்பாய் ஒருவர் படுகாயமடைந்ததாக படை நடவடிக்கைகள் தலைமை செயலகம் நேற்று தெரிவித்தது.

நேற்றுக் காலையில் இம் மோதல் ஏற்பட்டதாகவும் இருதரப்பிலும் துப்பாக்கி சமர் இடம் பெற்றதாகவும் இதன்போதே இராணுவ சிப்பாய் ஒருவர் படுகாயமடைந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை வவுனியாவிலும் மோதல் சம்பவங்கள் இடம் பெற்றுள்ளன. க-சி

# அரசுக்கான ஆதரவை ஐ.ஐ.தே.க. விலக்காது

(கொழும்பு)

தற்போதைய பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கத்திலிருந்து எந்த ஒரு காரணத்தை முன்னிட்டும் ஜனநாயக தேசிய முன்னணியின் லலித் பிரிவு விலகுவதாக முடிவெடுக்கவில்லையென அக்கட்சியின் பிரதம பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான லால்குணசேகரா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் :நேற்று வெளிவந்த கொழும்பு பத்திரிகைகள் இது பற்றி உண்மைக்கு புறம்பான செய்திகளை வெளியிட்டுள்ளன

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனுதிபதி ஆட்சி முறை தொடர்பாக அரசாங்கத்திற்கும் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணிக்கும் இடையில் கருத்து வேறுபாடு எதுவும் கிடையாது.

கட்சித்தலைவி ஸ்ரீமானி அத்துலத்முதலி கண்டியில் வெளியிட்ட கருத்துக்கள் பத்திரிகைகளில் திருத்திக் கூறப்பட்டன.

ஜனுதிபதி ஆட்சிமுறை ஒழிப்பு தொடர்பாக கட்சிக்குள் கலந்துரையாடல் எதுவும் இடம் பெறவில்லை. ஆனுலும் இதுவிடயத்தில் எதிர்காலத்தில் இணக்கமான ஒரு முடிவுக்கு வரமுடியும்.

இது விடயம் தொடர்பாக பொதுசன ஐக்கிய முன்னணிக்கும் அரசாங்கத்திற்கும் இதுவரையில் பேச்சுவார்த்தை எதுவும் இடம் பெறவில்லையென்றும் தெரிவித்தார். க-சி

### திருமலையில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆயுதங்கள் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டுள்ளன.

காவலரன் விடுதலைப் புலிகளின் தாக்குதலுக்கு உள்ளாகியபோது நான்கு இராணுவத்தினர் அவ்விடத்திலேயே கொல்லப்பட்டனர். ஏனையோர் தப்பி ஓடிவிட்டனர்.

இத் தாககுதலின் போது விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் விபரம் வருமாறு: ரி 56 இரண்டு ரக துப்பாக்கிகள் -04 ஏகே துப்பாக்கி ரவைக் கூடுகள் -09, ஏ கே துப்பாக்கி ரவைக்கூடு தாங்கி அணி -01, எம் 72 ரக குண்டு -04, நடுத்தர ரவைகள் -241. ம- சி

### விடுதலைப்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அமைப்புகளுடன் இது தொடர்பாக கூட்டாகவும் தனித்தனியாகவும் ஜனுதிபதி பேச்சு நடாத்தியுள்ளார்.

இந்தக் குழுக்களுக்கு ஆயுதம் மற்றும் இராணுவப் பயிற்சிகளும் வழங்கப்படவுள்ளது குறிப்பிடத்தக்கது.

மட்டக்களப்பு, வவுனியா, தீவுப்பகுதிகளில் இக் குழுக்களின் உறுப்பினர்கள் இராணுவம் மற்றும் பொலிசாருடன் இணைந்து செயற்பட்டு வருவதும் தெரிந்ததே.

தற்பொழுது புலிகளுடனுன யுத்தத்தில் நேரடியாக பங்கு பற்றும் நோக்குடனே இவர்களுக்கான உதவிகள் வழங்கப்படவுள்ளது குறிப்பிடத்தக்கது. ரி- சி

### பல்வேறு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

முன்தினம் நீரில் மூழ்கியதில் கப்டன் கண்ணன் அல்லது சின்னையா துஷ்யந்தன் (மட்டக்களப்பு) வீரச்சாவடைந்தார்.

கடந்த 21ம் திகதி மட்டக்களப்பு நரிக்கல் தோட்டம் பகுதியில் படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் 2ம் லெப் அருள்வேந்தன் அல்லது சகாயநாதன் நவநீதன் (அப்பாறை) சயனைட் உட்கொண்டுவீரச்சாவடைந்தார்.

கடந்த 18ம் திகதி மட்டக்களப்பு தம்பன்னையில் படையினருடன் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட மோதலில் கப்டன் கேசவன் அல்லது ஆனந்தம் சுதானந்த (மட்டக்களப்புவீரச்சாவடைந்தார்

வீரச்சாவடைந்த போராளிகளுக்கு விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தை தெரிவித்துள்ளனர். க-சி

### வடக்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவிக்கையில்: பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக்கடசி கிழக்குமாகாணத்தில் கணிசமான உறுப்பினர்களைக் கொண்டது. ஆனபடியால் ஐக்கியதேசியக் கட்சிக்கு அழைப்பு விடுத்திருக்க வேண்டும் அழைப்பு விடுக்கப்படாமை பிழையான நடவடிக்கையாகும் இதற்கு எமது எதிர்ப்பை தெரிவிககின்றோம் என்றூர். ம-சி

### பெருமளவு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

துடன் இணைந்து ஈ. பி. டி. பி. உறுப்பினர்கள் செயற்பட்டுவதும் குறிப்பிடத்தக்கது.

தற்போது இவர்களுக்கு ஆயுதம் வழங்கி விடுதலைப் புலிகளுக்கு எதிராக யுத்தம் செய்வதற்கு அரசு ஊக்கமளித்து வருகிறது.

கொழும்பிலுள்ள தமிழ்க் குழுக்களுக்கு அரசின் பல உதவிகள் கிடைக்கின்ற போதும் இவற்றில் ஈ. பி. டி. பி. அதிக உதவி பெறுவதும் குறிப்பிடத்தக்கது. ரி-சி

### தப்பியோடிய

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

குடும்பத்தவர்கள், தங்கள் பிள்ளைகள் இனி ஒரு போதும் படையில் சேர வரமாட்டார்கள் என்று ஜனுதிபதிக்கு கூறுமாறு கூறி கடிதத்தையும் ஏற்காது கிராம சேவகர்களை திருப்பி அனுப்பி விட்டார்களாம்.

தத்தமது பகுதிகளைச் சேர்ந்த படைகளிலிருந்து தப்பி வந்தவர்களை தாங்கள் ஒரு போதும் காணவில்லை என்றும் அவர்கள் எங்கு மறைந்திருக்கிறூர்கள் என்றும் தங்களுக்கு தெரியாதென பல பகுதிகளையும் சேர்ந்த கிராம சேவகர்கள் தெரிவித்துள்ளனர். -சி

### கிறிஸ்தவ

(1-ம் பக்கத் தொடர்ச்சி

மும் படையினரும் திட்டமிட்ட ரீதியில் விசமத்தனமான முறையில் விடுதலைப் புலிகளுக்கு எதிராக பிரசாரம் செய்து வருகின்றனர். இச் சம்பவத்திற்கும் எமது அமைப்பிற்கும் எதுவித தொடர்பும் இல்லையென்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர். க-சி

### கண்டியின்

(1ம் பக்கத்தொடர்ச்சி)

யிரக்கணக்கான மக்கள்கண்டி மாநகரில் கூடுவர் என எதிர்பார்க்கப்படுவதால் பல இடங்களிலும் பாதுகாப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது

இதேவேளை கண்டியில் தலதாமாளிகையின் பாதுகாப்பும் பெருமளவில் பலப்படுத்தப்பட்டுள்ளது. சி

### கொழும்பிலிருந்து

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

மேற்கொண்டுவரும் கைது மற்றும் பெரும் கெடுபிடிகளையடுத்தே பெருமளவு தமிழர்கள் அங்கிருந்து வெளியேறுவதாக தெரிவிக்கப்படுகிறது.

அண்மைக்காலங்களில் கைது செய்யப்பட்ட பல தமிழர்கள் விடுதலைசெய்யப்படவில்லை. இவர்களில் பலரது தகவல் எதுவும் கிடைக்காமல் பெற்றேூர் தினமும் பொலிஸ் நிலையங்களுக்கு அலைந்து திரிகின்றனர்.

இந்நிலையில் கொழும்பில் வீடுகளினுள் முடங்கிக் கிடக்கும் தமிழர்கள் அங்கிருந்து வெளியேறுவதாகவும் பலர் வெளியேற முயற்சித்து வருவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. - சி

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் [illegible] யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, [illegible] இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1995ம் ஆண்டு ஜூன் மாதம் 26-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post Office Sri Lanka under Licence number B/1683613.